www.surabooks.com

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 8ஆம் வகுப்பு

8 இயல்கள் கொண்ட புதிய பதிப்பு

**சிறப்பம்சங்கள்**

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு வினாக்கள் விடைகள், இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், உரைப்பத்தி வினாக்கள் விடைகள், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அலகுத் தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முக்கிய வினாக்கள் (※) மற்றும் அரசு மாதிரி வினா 2019 (அ.மா.வி.), ஆண்டு பொதுத்தேர்வு–ஏப்ரல் 2023 & 2024, காலாண்டுத் தேர்வு 2023 & 2024 மற்றும் அரையாண்டுத் தேர்வு 2023 & 2024 சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- சுராவின் மாதிரி வினாத்தாள்கள் இரண்டு இணைக்கப்பட்டுள்ளன.
- ஆண்டு பொதுத்தேர்வு–ஏப்ரல் 2025 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
www.surabooks.com

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : FY-8-T

எழுதி வழங்கியவர்

கி. லதா, M.A., B.Ed., M.Phil.,

**Also available for Std - IX & X**

Guides :

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Science (EM/TM)
- Sura's Social Science (EM/TM)

**Also available for Std - XI, XII**

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

# பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 8ஆம் வகுப்பு – தமிழ் உரைநூல்** – வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 8ஆம் வகுப்பு தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற, சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.
நலமே விளைக!

– பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

**தலைமை அலுவலகம்**
**சுரா பப்ளிகேஷன்ஸ்**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

18/04/2025

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Padi | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Asiad Colony | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** | Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **FEDERAL BANK** | Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Anna Nagar | Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : FDRL0001324 | IFSC | : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044-4862 9977, 044-4862 7755.
**Mobile :** 96001 75757 / 81242 01000 / 81243 01000.
**Email :** orders@surabooks.com **Website :** www.surabooks.com

www.surabooks.com

# பொருளடக்கம்


| | பொருண்மை/ இயல் | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் பகுதி | 1-4 | |
| 1. | மொழி<br>தமிழ் இன்பம் | தமிழ்மொழி வாழ்த்து (செய்யுள்)* | 5-27 | ஜூன் |
| | | ஆழிக்கு இணை (செய்யுள்) | | |
| | | தமிழ் வரிவடிவ வளர்ச்சி (உரைநடை) | | |
| | | சொற்பூங்கா (விரிவானம்) | | |
| | | எழுத்துகளின் பிறப்பு (கற்கண்டு) | | |
| 2. | இயற்கை<br>ஈடில்லா இயற்கை | இயற்கையைப் போற்றுவோம் (செய்யுள்)* | 28-53 | ஜூலை |
| | | பட்டமரம் (செய்யுள்) | | |
| | | தமிழர் மருத்துவம் (நேர்காணல்) (உரைநடை) | | |
| | | வெட்டுக்கிளியும் சருகுமானும் (விரிவானம்) | | |
| | | மயங்கொலிகள் (கற்கண்டு) | முதல் இடைத் தேர்வு | |
| | | திருக்குறள் (வாழ்வியல்)* | | |
| 3. | கல்வி<br>கல்வி கரையில | பாடறிந்து ஒழுகுதல் (செய்யுள்)* | 54-76 | ஆகஸ்ட்<br>செப்டம்பர் |
| | | புத்தியைத் தீட்டு (செய்யுள்) | | |
| | | பல்துறைக் கல்வி (உரைநடை) | | |
| | | ஆன்ற குடிப்பிறத்தல் (விரிவானம்) | | |
| | | வினைமுற்று (கற்கண்டு) | | |
| 4. | கலை, அழகியல், பண்பாடு<br>குழலினிது யாழினிது | திருக்கேதாரம் (செய்யுள்) | 77-102 | அக்டோபர் |
| | | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் (உரைநடை) | | |
| | | தமிழர் இசைக்கருவிகள் (விரிவானம்) | | |
| | | எச்சம் (கற்கண்டு) | | |
| | | திருக்குறள் (வாழ்வியல்)* | | |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம்<br>வையம்புகழ் வணிகம் | வளம் பெருகுக (செய்யுள்) | காலாண்டுத் தேர்வு | |
| | | கோணக்காத்துப் பாட்டு (செய்யுள்) | 103-128 | நவம்பர்<br>டிசம்பர் |
| | | கொங்குநாட்டு வணிகம்(உரைநடை) | | |
| | | காலம் உடன் வரும் (விரிவானம்) | | |
| | | வினையால் அமையும் தொடர்கள் (கற்கண்டு) | | |




enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com

| | பொருண்மை/ இயல் | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 6. | நாடு, சமூகம் பாருக்குள்ளே நல்ல நாடு | சிங்கி பெற்ற பரிசு (செய்யுள்)* | 129-147 | ஜனவரி |
| | | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் (உரைநடை) | | |
| | | ஒருவன் இருக்கிறான் (விரிவானம்) | | |
| | | இடைச்சொல், உரிச்சொல் (கற்கண்டு) | | |
| 7. | அறம், தத்துவம், சிந்தனை அறத்தால் வருவதே இன்பம் | ஒன்றே குலம் (செய்யுள்)* | 148-177 | பிப்ரவரி |
| | | மெய்ஞ்ஞான ஒளி (செய்யுள்) | | |
| | | அயோத்திதாசர் சிந்தனைகள் (உரைநடை) | | |
| | | மனித யந்திரம் (விரிவானம்) | | |
| | | வேற்றுமை (கற்கண்டு) | | |
| | | திருக்குறள் (வாழ்வியல்)* | இரண்டாம் இடைத் தேர்வு | |
| 8. | மனிதம், ஆளுமை குன்றென நிமிர்ந்துநில் | நோயும் மருந்தும் (செய்யுள்) | 178-198 | மார்ச் |
| | | சட்டமேதை அம்பேத்கர் (உரைநடை) | | |
| | | பால் மனம் (விரிவானம்) | | |
| | | புணர்ச்சி (கற்கண்டு) | | |
| | | மூன்றாம் இடைத் தேர்வு | அரையாண்டுத் தேர்வு | |
| | | திருப்புதல் தேர்வு | | |
| | | ஆண்டு பொதுத் தேர்வு | | |
| | | சுராவின் இரண்டு மாதிரி வினாத்தாள்கள் | 199-202 | |
| | | ஆண்டு பொதுத்தேர்வு–ஏப்ரல் 2025 வினாத்தாள் விடைகளுடன் | 203-210 | |


( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

## ☞ செய்யுள், உரைநடை, துணைப்பாடம் - ஆசிரியர்கள்

| தலைப்பு | இடம் பெற்ற நூல்/ தொகுப்பு | ஆசிரியர்கள் |
|---|---|---|
| தமிழ்மொழி வாழ்த்து | பாரதியார் கவிதைகள் | பாரதியார் |
| ஆழிக்கு இணை | தனிப்பாடல் திரட்டு | சந்தக்கவிமணி தமிழழகனார் |
| இயற்கையைப் போற்றுவோம் | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| பட்டமரம் | தமிழ்ஒளியின் கவிதைகள் | தமிழ்ஒளி |
| வெட்டுக்கிளியும் சருகுமானும் (விரிவானம்) | காடர்களின் கதைகள் | தொகுப்பு : மனிஷ் சான்டி, மாதுரி ரமேஷ் தமிழாக்கம் : வ.கீதா |
| பாடறிந்து ஒழுகுதல் | கலித்தொகை | நல்லந்துவனார் |
| புத்தியைத் தீட்டு | - | ஆலங்குடி சோமு |
| பல்துறைக் கல்வி (உரைநடை) | இளமை விருந்து | திரு.வி.க. |
| ஆன்ற குடிப்பிறத்தல் (விரிவானம்) | ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் குறிப்புகள் | பி.ச. குப்புசாமி |
| திருக்கேதாரம் | தேவாரம் | தொகுத்தவர் : நம்பியாண்டார் நம்பி<br>பாடியவர் : சுந்தரர் |
| வளம் பெருகுக | தகடூர் யாத்திரை | பெயர் : அறியப்படவில்லை |
| கோணக்காத்துப் பாட்டு | பஞ்சக்கும்மிகள் | வெங்கப்பூர் சாமிநாதன், தொகுப்பு - செ. இராசு |
| காலம் உடன் வரும் (விரி) | (சிறுகதை) | கன்னிவாடி சீரங்கராயன் சிவக்குமார் |
| சிங்கி பெற்ற பரிசு | திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூட ராசப்பக் கவிராயர் |
| ஒருவன் இருக்கிறான் (விரி) | கு. அழகிரிசாமி சிறுகதைகள் | கு. அழகிரிசாமி |
| ஒன்றே குலம் | திருமந்திரம் | திருமூலர் |
| மெய்ஞ்ஞான ஒளி | குணங்குடியார் பாடற்கோவை | குணங்குடி மஸ்தான் சாகிபு |
| மனித யந்திரம் (விரிவானம்) | மணிக்கொடி இதழ் | புதுமைப்பித்தன் (சிறுகதை மன்னன்) |
| நோயும் மருந்தும் | நீலகேசி | பெயர் அறியப்படவில்லை |
| பால் மணம் (விரிவானம்) | மீதமிருக்கும் சொற்கள் தொகுப்பு : அ. வெண்ணிலா | கோமகள் (இராஜலட்சுமி) |


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

# மனப்பாடச் செய்யுள்

## கவிதைப் பேழை

இயல் - 1

### தமிழ்மொழி வாழ்த்து

※ (ஏப்ரல், கா.தேர்வு 2023&2024, அரை.தேர்வு 2024)

வாழ்க நிரந்தரம் ! வாழ்க தமிழ்மொழி !
வாழிய வாழியவே !
வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே !
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே !
எங்கள் தமிழ்மொழி ! எங்கள் தமிழ்மொழி !
என்றென்றும் வாழியவே !

- பாரதியார்

இயல் - 2

### இயற்கையைப் போற்றுவோம்

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்தலான்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்

மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாம நீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்

- இளங்கோவடிகள்



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

இயல் - 2

## திருக்குறள்

### நடுவுநிலைமை

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர் (அ.மா.வி.2019; ஏப்ரல் 2023, அரை.தேர்வு 2024)
எச்சத்தால் காணப் படும். (காலாண்டுத் தேர்வு 2024)

### கூடா ஒழுக்கம்

4. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன (காலாண்டுத் தேர்வு 2023)
வினைபடு பாலால் கொளல்.

### கல்லாமை

6. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் (அரையாண்டுத் தேர்வு 2023)
கற்றாரோடு ஏனை யவர்.

### குற்றங்கடிதல்

8. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

– திருவள்ளுவர்

இயல் - 3

## பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

– நல்லந்துவனார்

www.surabooks.com

இயல் - 4

## திருக்குறள்

### தெரிந்து வினையாடல்

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து (ஏப்ரல்–2024)
அதனை அவன்கண் விடல்.

### சொல்வன்மை

7. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

8. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

– திருவள்ளுவர்

இயல் - 7

## ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே அ.மா.வி 2019

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே.

– திருமூலர்

இயல் - 7

## திருக்குறள்

### படைச்செருக்கு

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

### நட்பு

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

### பண்புடைமை

9. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

– திருவள்ளுவர்

இயல் - 8

## நோயும் மருந்தும்

பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே.

(பா.116)

தமிழ் இன்பம்

இயல் 1

# தமிழ்மொழி வாழ்த்து

கவிதைப்பேழை

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| **ஆசிரியர்** | : | சி.சுப்பிரமணிய பாரதியார். |
| **பன்முக ஆற்றல்** | : | கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர். |
| **எழுதிய நூல்கள்** | : | சந்திரிகையின் கதை, தராசு, வசன கவிதைகள், சீட்டுக்கவி |
| **புகழாரம்** | : | சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார். |
| **பாடப்பகுதி** | : | பாரதியார் கவிதைகள் என்னும் தொகுப்பில் தமிழ்மொழி வாழ்த்து என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது. |

## பாடல்

| | |
|---|---|
| வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!<br>வாழிய வாழியவே!<br>வான மளந்தது அனைத்தும் அளந்திடு<br>வண்மொழி வாழியவே!<br>ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி<br>இசைகொண்டு வாழியவே!<br>எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!<br>என்றென்றும் வாழியவே! | சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்<br>துலங்குக வையகமே!<br>தொல்லை வினைதரு தொல்லை அகன்று<br>சுடர்க தமிழ்நாடே!<br>வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி<br>வாழ்க தமிழ்மொழியே!<br>வானம் அறிந்த தனைத்தும் அறிந்து<br>வளர்மொழி வாழியவே! **- பாரதியார்** |

## சொல்லும் பொருளும்

1. நிரந்தரம் - காலம் முழுமையும்
2. வைப்பு - நிலப்பகுதி
3. சூழ்கலி - சூழ்ந்துள்ள அறியாமை இருள்
4. வண்மொழி - வளமிக்கமொழி ※
5. இசை - புகழ்
6. தொல்லை - பழமை, துன்பம்

## பொருளுரை

தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க! ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க! ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க!



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

www.surabooks.com

எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க! எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்! அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக! பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க! தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க! வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ........... .** (அ.மா.வி. 2019; ஏப்ரல் 2023)

அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி

**விடை: அ) வைப்பு**

2. **'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........... .** ※

அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்

இ) என் + என்றும் ஈ) என்றும் + என்றும்

**விடை: ஆ) என்று + என்றும்**

3. **'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........... .**

அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது

இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது

**விடை:** இ) வானம் + அளந்தது

4. **அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........... .**

அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்ததனைத்தும்

இ) அறிந்தனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்

**விடை: ஆ) அறிந்ததனைத்தும்**

5. **வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........... .**

அ) வானமறிந்த ஆ) வான்அறிந்த

இ) வானம்அறிந்து ஈ) வான்மறிந்த

**விடை: இ) வானமறிந்த**

### குறுவினா

1. **தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?** ※ (ஏப்ரல் 2023 & 2024, கா.தேர்வு 2024)

**தமிழ் புகழ் கொண்டு வாழுமிடம் :** ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ் கொண்டு வாழ்கிறது.

2. **தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

**தமிழின் வளர்ச்சி :** தமிழ்மொழி, வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

### சிறுவினா

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.** (ஏப்ரல் 2023, கா.தேர்வு 2024)

**தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகள் :**

(i) தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்கிறது.

www.surabooks.com

(ii) ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான மொழி.

(iii) ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்ட மொழி.

(iv) எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழும்.

(v) எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும். அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படையும்.

(vi) பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிரவேண்டும்.

(vii) வானம்வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழியைப் பாரதியார், என்றென்றும் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறார்.

## சிந்தனை வினா

**பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**

**பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் :**

(i) தமிழ்மொழி, தமிழ் பேசும் பலருடைய தாய்மொழி. திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழி. எல்லா மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது.

(ii) தமிழ், அறிவியல், மருத்துவம், கணிதம் எனப் பலவற்றையும் கூறுகிறது. தமிழர் வானியல் அறிவிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.

(iii) வான் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்கள் தமிழில் உள்ளன. ஞாயிறு, திங்கள், விண்மீன் மற்றும் வானில் வலம் வரும் கோள்கள் பற்றியும் ஆராய்ந்து கூறியுள்ளனர் தமிழர்.

(iv) இலக்கியவளம், இலக்கண வளம், சொல்வளம் என எல்லா வளங்களையும் தமிழ்மொழி பெற்றுள்ளதால் பாரதியார் தமிழ்மொழியை வண்மொழி என்று அழைக்கிறார்.

## கற்பவை கற்றபின்

1. **'தமிழ்மொழி வாழ்த்து' - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

இப்பாடலை மாணவர்கள் இசையுடன் பாடி பழக வேண்டும்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக :

1. 'தமிழ்மொழி வாழ்த்து' என்னும் தலைப்பில் அமைந்துள்ள பாடல் **பாரதியார் கவிதைகள்** என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
2. பாரதியார் நடத்திய இதழ்கள் **இந்தியா, விஜயா** .
3. பாரதியாரின் உரைநடை நூல்கள் **சந்திரிகையின் கதை, தராசு.**
4. மொழி மக்களின் **பண்பாட்டுடன்** நெருங்கிய தொடர்புடையது.
5. கருத்தை அறிவிக்கும் கருவி **மொழி**.

### குறுவினா :

1. **சுப்பிரமணிய பாரதியாரின் பன்முக ஆற்றல்கள் யாவை?**

கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் போன்றவை பாரதியாரின் பன்முக ஆற்றல்கள் ஆகும்.

**2. தமிழ்நாடு எவ்வகைத் துன்பங்கள் நீங்கி ஒளிர வேண்டும்?**

பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர வேண்டும்.

**3. பாரதிதாசன் பாரதியாரை எவ்வாறெல்லாம் புகழ்ந்துள்ளார்?**

**பாரதிதாசன், பாரதியாரைப் புகழ்ந்தமை :**

(i) சிந்துக்குத் தந்தை

(ii) செந்தமிழ்த் தேனீ

(iii) புதிய அறம் பாட வந்த அறிஞன்

(iv) மறம் பாட வந்த மறவன்.

**4. பாரதியார் இயற்றியவைகளாக நும் பாடப் பகுதியில் குறிப்பிடப்பட்டவை எவை?**

(i) சந்திரிகையின் கதை, தராசு உள்ளிட்ட உரைநடை நூல்கள்.

(ii) வசன கவிதைகள்

(iii) சீட்டுக்கவிகள் ஆகியவையாகும்.

**5. தமிழ்மொழி, எதனால் சிறப்படைய வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?**

(i) தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்ந்து, எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருளை நீக்கும்.

(ii) அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைய வேண்டும் என பாரதியார் கூறுகிறார்.

☆ ☆ ☆

தமிழ் இன்பம்

# இயல் 1 ஆழிக்கு இணை

கவிதைப்பேழை

## நூற்குறிப்பு

புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பு தனிப்பாடல் திரட்டாகும்.

இந்த நூலிலிருந்து இப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.**(ஐந்தாம் பகுதி – கழகப்பதிப்பு)**

ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் அணி ஆகும். இதனைச் **சிலேடை** என்றும் கூறுவர்.

## பாடல்

**முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்(கு)
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.**
**– சந்தக்கவிமணி தமிழழகனார்**

www.surabooks.com



## சொல்லும் பொருளும்

1. துய்ப்பதால் – கற்பதால், தருதலால்
2. மெத்த வணிகலம் – அணிகலன், பெரிய வணிகக் கப்பல்
3. மேவலால் – பொருந்துதலால், பெறதலால்
4. நித்தம் – நாள்தோறும்
5. ஆழி – கடல்

## பொருளுரை

**தமிழ்:**

இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**கடல்:**

முத்துக்களைத் தருகிறது. வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. தன் அலையால் சங்கினை தடுத்து நிறுத்திக் காக்கிறது.

| பாடல் | (தமிழ்) | (கடல்) |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினைத் அமிழ்ந்து எடுத்தல். |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கம். | மூன்று வகையான சங்குகள் தருதல். |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை. | நீரலையைத் தடுத்து நிறுத்தி, சங்கினைக் காத்தல் |
| ஆழிக்கு இணைகிடந்த தேதமிழ் ஈண்டு | இவ்வாறு தேனினும் இனிய தமிழும் கடலும் ஒப்புமை உடையதாக இருக்கின்றன. | |

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தமிழ்த்தாய் ஐம்பெருங்காப்பியங்களை ................ அணிந்துள்ளாள்.**
   அ) மாலையாக ஆ) ஆடையாக
   இ) அணிகலன்களாக ஈ) மகுடமாக **விடை: இ) அணிகலன்களாக**

2. **பெரிய கப்பல்கள் ................ மீது செல்லும்.** (ஏப்ரல்–2024)
   அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி **விடை: ஆ) ஆழி**

3. **'முத்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................ .**
   அ) மூன்று + தமிழ் ஆ) முத்து + தமிழ்
   இ) மு + தமிழ் ஈ) முத் + தமிழ் **விடை: அ) மூன்று + தமிழ்**

**4. 'தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது' - இத்தொடரில் தன் என்னும் சொல் ................ குறிக்கிறது.**

அ) அணிகலனைக் ஆ) கடலைக்

இ) கப்பலைக் ஈ) தமிழைக் **விடை: ஆ) கடலைக்**

**பாடலின் பொருள் உணர்ந்து தொகைச்சொற்களை விரித்து எழுதுக.**

1. முத்தமிழ் – இயல், இசை, நாடகம்
2. முச்சங்கம் – முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்
3. முச்சங்கு – வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்

## குறுவினா

**1. தமிழ் யாரால் காக்கப்பட்டதாகத் தமிழழகனார் கூறுகிறார்?**

தமிழ் சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

**2. இரட்டுறமொழிதல் அணி என்பது யாது?**

ஒரு சொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணி ஆகும். இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.

## சிறுவினா

**1. தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?**

| பாடல் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கம் | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப் புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்து நிறுத்தி, சங்கினைக் காத்தல் |

## சிந்தனை வினா

**தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

**தமிழ்:** தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது:
முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது :
ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது:
சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

**கடல்:** கடல், முத்தினைத் தருகிறது.
வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.
மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது :
தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.



www.surabooks.com

## கற்பவை கற்றபின்

1. **இருபொருள் தரும் சொற்கள் சிலவற்றை எழுதி, அவற்றின் இரு பொருள்களையும் எழுதுக.**

**(எ.கா)** மாலை – மலர் மாலை, அந்திப்பொழுது

ஆறு – நதி, வழி
ஞாயிறு – கிழமை, சூரியன்
திங்கள் – கிழமை, சந்திரன்
மதி – அறிவு, சந்திரன்
படி – நூலைப்படி, வாயிற்பெயர், அளவைப் பெயர்
மறை – மறைத்தல், வேதம்
அடி – அடித்தல், அளவு (நீட்டல் அளவு)
ஓடு – ஓடுதல், கூரை
நகை – சிரிப்பு (புன்னகை), அணிகலன்
பார் – உலகம், காண்

2. **கீரைப்பாத்தி, குதிரை ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பாடிய சிலேடைப் பாடலை படித்துச் சுவைக்க**

கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால் – முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே

– காளமேகப் புலவர்

☆ ☆ ☆

தமிழ் இன்பம்

# இயல் 1 தமிழ் வரிவடிவ வளர்ச்சி

உரைநடை உலகம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ........................ காரணமாக அமைந்தது.** (காலாண்டுத் தேர்வு 2023 & 2024, அரையாண்டுத் தேர்வு 2024)

அ) ஓவியக்கலை   ஆ) இசைக்கலை
இ) அச்சுக்கலை   ஈ) நுண்கலை

**விடை: இ) அச்சுக்கலை**

**2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ........................ என அழைக்கப்படுகிறது.**

அ) கோட்டெழுத்து | ஆ) வட்டெழுத்து
இ) சித்திர எழுத்து | ஈ) ஓவிய எழுத்து

**விடை: ஆ) வட்டெழுத்து**

**3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ............... .** ※ (அரையாண்டுத் தேர்வு, ஏப்ரல் 2023)

அ) பாரதிதாசன் | ஆ) தந்தை பெரியார்
இ) வ.உ. சிதம்பரனார் | ஈ) பெருஞ்சித்திரனார்

**விடை: ஆ) தந்தை பெரியார்**

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ......... என அழைக்கப்பட்டன.
**விடை: கண்ணெழுத்துகள்** அ.மா.வி 2019

2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ......... **விடை: வீரமாமுனிவர்**

## குறுவினா

**1. ஓவிய எழுத்து என்றால் என்ன?** (அரையாண்டுத் தேர்வு–2024)

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவம் ஓவிய எழுத்து எனப்படும்.

**2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?** (ஏப்ரல்–2024)

(i) ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.

(ii) இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலை, ஒலி எழுத்து நிலை எனப்பட்டது.

**3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?** (காலாண்டுத் தேர்வு 2023)

(i) ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளைப் பயன்படுத்தினர்.

(ii) புள்ளிகளைப் பயன்படுத்தினால் ஓலைகள் சிதைந்து விடும் என்பதால் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலவில்லை.

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.** ※ (அரையாண்டுத் தேர்வு 2023, கா.தேர்வு 2024)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

## சிறுவினா

**1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

(i) ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

(ii) ஓலைச்சுவடிகளில் நிறுத்தற்குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.

(iii) புள்ளி இடப்பட்டு எழுதவேண்டிய எழுத்துகள் புள்ளிகள் இல்லாமல் எழுதப்படும்போது அவற்றின் இடம் நோக்கி மெய்யா, உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.

(iv) இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

2. **தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.** (அ.மா.வி. 2019; கா.தேர்வு 2023 & 2024)

**தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றம் :** (அரையாண்டுத் தேர்வு 2024)

(i) தமிழ் எழுத்துகளில் நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால்(ா) பயன்படுத்தப்படுகிறது.

(ii) ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக் கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது.

(iii) ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது.

(iv) குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

## நெடுவினா

**எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.** ※(காலாண்டுத் தேர்வு 2023, ஏப்ரல் 2024)

**முன்னுரை :**

மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான். பிறகு ஒலிகள் மூலம் வெளிப்படுத்தினான். அடுத்துச் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக் கொண்டான். காலப் போக்கில் அவை பேச்சு மொழியாக உருவானது.

**வரிவடிவத்தின் தொடக்க நிலை :**

மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலையாகும்.

**ஓவிய எழுத்து :**

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**ஒலி எழுத்து நிலை :**

அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து வடிவ நிலை என்பர். இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன.

**தமிழ் எழுத்துகள் :**

காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

**முடிவுரை :**

பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். பிறகு அச்சில் ஏற்றப்பட்டது. காலந்தோறும் வளர்ந்து வரிவடிவத்தில் பல மாற்றங்களை ஏற்று, தற்காலத்தில் கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாக வளர்ந்துள்ளது தமிழ் எழுத்துகள்.

www.surabooks.com

**சிந்தனை வினா**

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

(i) பள்ளிகளில் தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும். பிறமொழிகளையும் அறிந்து கொள்ளுதல் நன்மை பயக்கும் என்பதால் அவற்றைக் கூடுதலாக கற்க வழிவகை செய்யலாம்.

(ii) தமிழ் வழியில் படிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(iii) கன்னித் தமிழைக் கணினித் தமிழில் ஏற்றி உலகெங்கும் பரப்ப வேண்டும்.

(iv) புதியதாகக் கண்டறியப்பட்ட அறிவியல் சாதனங்களுக்கும், பிற துறையில் கண்டறியப்படும் சொற்களுக்கும் கலைச்சொற்களைக் கண்டறிய வேண்டும்.

(v) பிறமொழியில் உள்ள நூல்களைத் தமிழில் எளிமையான முறையில் மொழிபெயர்க்க வேண்டும்.

(vi) சிறந்த தமிழ் நூல்கள் நிறைந்த, இலவச நூலகங்களை நாடெங்கிலும் அமைக்க வேண்டும்.

(vii) ஒவ்வொரு துறைக்கும் எளிமையான தமிழில் நூல்கள் வெளியிடப்பட வேண்டும்.

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்ஸனகள் பற்றிய இந்தியாவின் கவஸல பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

'மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினுலும், நோயினுலும் அச்சுறுத்தப்படுகிருன்; பலவீனுக இருப்பவன் போருக்கு அஞ்சுகிருன்; செல்வந்தனுக இருப்பவனே தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிருன்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நிஸனவு கூரத் தக்கது.

| பழைய வரிவடிவச் சொற்கள் | இன்றைய வரிவடிவச் சொற்கள் | பழைய வரிவடிவச் சொற்கள் | இன்றைய வரிவடிவச் சொற்கள் |
|---|---|---|---|
| சூழ்நிலே | சூழ்நிலை | பிரச்ஸனகள் | பிரச்சனைகள் |
| கவஸல | கவலை | உணவினுலும் | உணவினாலும் |
| நோயினுலும் | நோயினாலும் | அச்சுறுத்தப் படுகிருன் | அச்சுறுத்தப்படுகிறான் |
| பலவீனுக | பலவீனனாக | அஞ்சுகிருன் | அஞ்சுகிறான் |
| செல்வந்தனுக | செல்வந்தனாக | இருப்பவனே | இருப்பவனோ |
| நிஸனவு | நினைவு | | |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. எழுத்துகளின் __வரிவடிவங்கள்__ மொழிக்கு மொழி வேறுபடுகின்றன.

2. மனிதன் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான்.
3. பொருளின் ஓவிய வடிவமாக இருந்த வரிவடிவம் ஓவிய எழுத்து.
4. ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலை ஒலி எழுத்து வடிவ நிலை.
5. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்கள் காணப்படும் இடங்கள் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்கள்.
6. கல்வெட்டுகள் மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.
7. செப்பேடு, கல்வெட்டில் காணப்படும் வரிவடிவங்கள் வட்டெழுத்து, தமிழி எழுத்து என இருவகைப்படும்.
8. அரச்சலூர் கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.
9. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் இடம்பெற்ற எழுத்துகள் வட்டெழுத்துகள்.
10. முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலம் பதினொன்றாம் நூற்றாண்டு.
11. ‘கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி’ என்னும் தொடர் இடம்பெற்ற நூல் சிலப்பதிகாரம்.
12. பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர்.
13. தமிழ்மொழியை எழுத இருவகை எழுத்துகள் இருந்ததற்குச் சான்றாக அமைந்த கல்வெட்டு அரச்சலூர் கல்வெட்டு.
14. பாறைகளில் செதுக்கும்போது பயன்படுத்த முடியாதது வளைகோடுகள்.
15. பாறைகளில் செதுக்கும்போது பயன்படுத்தப்பட்டவை நேர் கோடுகள்.
16. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.
17. ஒற்றைப்புள்ளி, இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக பயன்படுத்தப்படுபவை துணைக்கால்(ா), இணைக்கொம்பு(ை), கொம்புக்கால்(ள).
18. தமிழ்மொழி கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் ஆகியிருக்கிறது.
19. மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க கண்டுபிடித்தது மொழி.

**பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

**வினாக்கள்.**

1. **பழங்காலத்தில் எழுத்துகள் எவற்றில் எழுதப்பட்டது?**
   பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுத்துகள் எழுதப்பட்டன.
2. **நேர்க்கோடுகள் எதற்காக பயன்படுத்தப்பட்டது?**
   பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளை பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.
3. **எழுத்துகளை அழகுப்படுத்த அவற்றின் மேல் எதை இட்டனர்.**
   எழுத்துகளை அழகுப்படுத்த அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இட்டனர்.

**குறுவினா :**

**1. எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை யாது?**

மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான். அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை ஆகும்.

**2. தமிழ் எழுத்துகள் எப்போது நிலையான வடிவத்தைப் பெற்றன?**

காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வந்துள்ளன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

**3. கண்ணெழுத்து - குறித்து எழுதுக.**

கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன. இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும், 'கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' என்னும் தொடரால் அறியலாம்.

**4. எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட காரணங்களாக அமைந்தவை யாவை?**

எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைந்தன.

**5. தமிழ்மொழியின் வரிவடிவ வளர்ச்சியின் இன்றைய நிலை யாது?**

காலந்தோறும் ஏற்பட்ட வரிவடிவ வளர்ச்சி காரணமாகத் தமிழ்மொழியைப் பிற மொழியினரும் எளிதில் கற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்மொழி கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

**சிறுவினா :**

**1. பேச்சுமொழி எவ்வாறு உருவானது?**

(i) மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான்.

(ii) காலப்போக்கில் தனது குரலைப் பயன்படுத்தி ஒலிகள் மூலம் தனது கருத்துகளை வெளிப்படுத்த முற்பட்டான்.

(iii) அடுத்துச் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக்கொண்டான். அவை மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டதால் செம்மைப்பட்டுக் காலப்போக்கில் அவை பண்பட்டுப் பேச்சுமொழி உருவானது.

**2. தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்கள் பற்றி எழுதுக.**

(i) தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களை கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும் செப்பேடுகளிலும் காணமுடிகிறது.

(ii) கல்வெட்டுகள் பொ.ஆ.மு. (கி.மு.) மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. செப்பேடுகள் பொ.ஆ. (கி.பி.) ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

(iii) கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழி எழுத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.



www.surabooks.com

www.surabooks.com



3. **பெரியார் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் நான்கனை எழுதுக.**

| பழைய வடிவம் | புதிய வடிவம் |
|---|---|
| ௌ | ணா |
| ற | னா |
| ணை | ணை |
| னெ | னொ |

4. **இரு வகையான எழுத்துகள் பற்றி எழுதுக.**

(i) வட்டெழுத்து என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ஆகும். தமிழி எழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம் ஆகும்.

(ii) சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகளே இடம் பெற்றுள்ளன.

(iii) முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலமான பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழ் எழுத்துகள் காணப்படுகின்றன.

5. **தமிழ் எழுத்துகளில் புள்ளிகளின் நிலை பற்றி எழுதுக.**

(i) எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது.

(ii) எடுத்துக்காட்டாக ெ்து என எழுதப்பட்டால் எது என்றும் எது என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.

(iii) அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் **(க. = கா, த. = தா)** கருதப்பட்டன.

(iv) ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின் முன் இரட்டைப் புள்ளி இட்டனர். **(..க =கை)**

(v) எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இருபுள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. **(கெ.. = கௌ, தெ..= தௌ).**

(vi) மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர். **(ப்)**

(vii) குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

## நெடுவினா :

**எழுத்துச் சீர்திருத்தத்தில் வீரமாமுனிவர், பெரியார் மேற்கொண்டவை எவை?**

**வீரமாமுனிவர் :**

தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர். எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார். எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.

அதேபோல ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக்கொம்புடு இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து (ே ா) புதிய வரி வடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

**வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

**பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் :**

இருபதாம் நூற்றாண்டு வரை ணா, றா, னா ஆகிய எழுத்துகளை ணு, று, னு என எழுதினர். அதே போல ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளை ணை, லை, ளை, னை என எழுதினர். இவற்றை அச்சுக் கோப்பதற்காக இவ்வெழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இக்குறைகளை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்தில் சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 1. | ணு | ணா | அண்ணு – அண்ணா |
| 2. | ணை | ணை | அணை – அணை |
| 3. | ணெ | ணொ | மண்ணெடு – மண்ணொடு |
| 4. | ணே | ணோ | கண்ணேடு – கண்ணோடு |
| 5. | லை | லை | தலை – தலை |
| 6. | ளை | ளை | களை – களை |
| 7. | று | றா | சிறுர் – சிறார் |
| 8. | றெ | றொ | மற்றெரு – மற்றொரு |
| 9. | றே | றோ | காற்றேடு – காற்றோடு |
| 10. | னு | னா | மன்னு – மன்னா |
| 11. | னை | னை | வினை – வினை |
| 12. | னெ | னொ | என்னெடு – என்னொடு |
| 13. | னே | னோ | என்னேடு – என்னோடு |

☆ ☆ ☆

தமிழ் இன்பம்

இயல் 1

# சொற்பூங்கா

விரிவானம்

## ஆசிரியர் குறிப்பு

| | |
|---|---|
| **ஆசிரியர்** | : இரா. இளங்குமரனார் (செந்தமிழ் அந்தணர்) |
| **பணி** | : பள்ளி ஆசிரியர் |
| **பன்முக ஆற்றல்** | : நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் |
| **எழுதிய நூல்கள்** | : இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் |
| **தொகுப்பு நூல்** | : தேவநேயம் |
| **சிறப்புகள்** | : திருச்சிக்கு அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார். |
| **பாடப்பகுதி** | : தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள் என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்து இங்குத் தரப்பட்டுள்ளன. |

www.surabooks.com

## மதிப்பீடு

**தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.** (ஏப்ரல் 2023)

**முன்னுரை :**

தமிழ்மொழி செந்தமிழாகவும் உயிரோட்டத் தமிழாகவும் விளங்குகிறது. தமிழ்மொழி சொல்வளம் மிக்கமொழி என்பதை இக்கட்டுரையின் மூலம் பார்ப்போம்.

**மொழி வகை :**

தமிழில் ஓர் எழுத்துமொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாக உள்ளது. "நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி" என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**ஓரெழுத்து ஒருமொழி :**

உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார். நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.

**கலைச்சொல் வடிவம் :**

பூ, கா என்ற ஒரு இரு ஓரெழுத்து ஒருமொழியை இணைத்து பூங்கா என வழங்கினர். ஆ, மா இரண்டையும் ஆமா என்னும் சொல் உருவாக்கப்பட்டு காட்டுப் பசுவைக் குறித்தது. மாநிலம், மாநாடு, மாஞாலம் இச்சொற்களில், மா என்பது பெரிய என்ற பொருளை தந்தது. அரிமா, பரிமா, நரிமா, வரிமா, கரிமா என்று விலங்கினப் பெயராகிறது.

**இக்கால வழக்கு :**

ஈ என்ற சொல் ஒலிக்குறிப்பைக் காட்டும்; பூச்சி வகையைச் சுட்டும்; வழங்குதல் என்னும் பொருளை உணர்த்தும். ஈக என்ற பொருளில் வழங்குதல் வெளிப்படை ஆகும். "ஈ என்று பல்லைக் காட்டாதே" என்று அறிவுரை கூறவும் பயன்படும். போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை இக்காலத்தில் வழங்கும் சொற்களாகும்.

**மாற்றம் பெற்றவை :**

ஆன், மான், கோன், தேன், பேய் ஆகியவை முறையே ஆ, மா, கோ, தே, பே என மாறியது. கூடு, பொருந்து, சேர் என்னும் பொருளை உடைய "ஏய்" அழைத்தல் பொருளைக் குறித்தது. "ஏ" என வழக்கில் மாறிவிட்டது. ஏவலன், ஏகலை, ஏகலைவன் என்ற சொற்களும் "ஏ" வை அடிச்சொல்லாக மாற்றம் பெற்றவை.

**முடிவுரை :**

தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பவனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை, மொழிப்பற்றை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் நிற்கிறது. மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டைக் காப்பான்.

## கற்பவை கற்றபின்

**ஓரெழுத்து ஒரு மொழிகள் இடம் பெறுமாறு ஐந்து தொடர்கள் எழுதுக.**

(i) பழங்காலத்தில் போர் தொடங்கும் முன் **ஆ**நிரைகளைக் கவர்ந்து வருவர். (ஆ– பசு)

(ii) "கனமான பொருளைத் தூக்காதே, **வை**" என்று தாய் மகனிடம் கூறினார்.

(iii) கந்தனுக்கு முருகன் **கை** கொடுத்து உதவி செய்தான்.

(iv) **தை** மாதம் முதல் நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படும்.

(v) "**நீ** எங்கே சென்றாய்?" என்று சீதா இராணியிடம் கேட்டாள்.

☆ ☆ ☆

தமிழ் இன்பம்

இயல் 1

# எழுத்துகளின் பிறப்பு

கற்கண்டு

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **உதடுகளைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .......... .** (அரையாண்டுத் தேர்வு 2024)

அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ **விடை: ஆ) உ, ஊ**

2. **ஆய்த எழுத்து பிறக்கும் இடம் .......... .** ※

அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு **விடை: இ) தலை**

3. **வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் .......... .** (காலாண்டுத் தேர்வு 2023)

அ) மார்பு ஆ) தலை இ) மூக்கு ஈ) கழுத்து **விடை: ஆ) மார்பு**

4. **நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ..................**

அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம் **விடை: இ) ட், ண்**

5. **கீழ் உதடும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து .......... .**

(ஏப்ரல் 2023, கா.தேர்வு 2024)

அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ் **விடை: ஈ) வ்**

### பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | க், ங் | - நாவின் இடை, அண்ணத்தின் இடை |
| 2. | ச், ஞ் | - நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி |
| 3. | ட், ண் | - நாவின் முதல், அண்ணத்தின் அடி |
| 4. | த், ந் | - நாவின் நுனி, அண்ணத்தின் நுனி |

**விடை :**

| | | |
|---|---|---|
| 1. | க், ங் | - நாவின் முதல், அண்ணத்தின் அடி |
| 2. | ச், ஞ் | - நாவின் இடை, அண்ணத்தின் இடை |
| 3. | ட், ண் | - நாவின் நுனி, அண்ணத்தின் நுனி |
| 4. | த், ந் | - நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி |

www.surabooks.com

## சிறுவினா

**1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?** ※ (காலாண்டுத் தேர்வு 2024)

(i) உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறு வேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.

(ii) இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?** (ஏப்ரல், காலாண்டுத் தேர்வு 2023)

**மெய் எழுத்துகளின் இடப்பிறப்பு :** (அரையாண்டுத் தேர்வு 2024)

(i) வல்லின மெய்கள் (க் ச் ட் த் ப் ற்) – மார்பு

(ii) மெல்லின மெய்கள் (ங் ஞ் ண் ந் ம் ன்) – மூக்கு

(iii) இடையின மெய்கள் (ய் ர் ல் வ் ழ் ள்) – கழுத்து

**3. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.** (அரை.தேர்வு 2023, கா.தேர்வு 2024)

(i) ழகரம் – மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கும்.

(ii) லகரம் – மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கும்.

(iii) ளகரம் – மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கும்.

## கற்பவை கற்றபின்

**'ஆய்தம்' – இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.**

| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிர் | இடையினம் | வல்லினம் | மெல்லினம் |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. எழுத்துகளின் பிறப்பினை **இடப்பிறப்பு, முயற்சிப் பிறப்பு** என இரண்டு வகையாகப் பிரிப்பர்.
2. உயிர்எழுத்துகள் பன்னிரண்டும் **கழுத்தை** இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
3. வல்லின மெய் எழுத்துகள் ஆறும் **மார்பை** இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
4. மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் **மூக்கை** இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
5. ஆய்த எழுத்து **தலையை** இடமாகக் கொண்டு பிறக்கிறது.
6. நாவின் முதற்பகுதி அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் **க், ங்**
7. நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் **ட், ண்.**
8. மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் **த், ந்.**
9. மேல் உதடும் கீழ் உதடும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் **ப், ம்.**



www.surabooks.com

10. நாக்கின் அடிப்பகுதி, மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்து ய்.
11. மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கும் எழுத்துகள் ர், ழ்.
12. மேல்வாய்ப்பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கும் எழுத்து ல்.
13. மேல் வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கும் எழுத்து ள்.
14. மேல் வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கும் எழுத்து வ்.
15. மேல் வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ந், ன்.
16. வாயைத் திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கும் எழுத்து ஆய்த எழுத்து.

**குறுவினா :**

**1. சார்பெழுத்தின் பிறப்பு பற்றி எழுதுக.**

ஆய்த எழுத்து வாயைத் திறந்து ஒலிக்கும் முயற்சியில் பிறக்கிறது. பிற சார்பெழுத்துகள் யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

**2. உயிர் எழுத்துகளின் முயற்சிப் பிறப்பினை எழுதுக.**

| எழுத்துகள் | முயற்சிப் பிறப்பு |
|---|---|
| அ, ஆ | வாய் திறத்தல் |
| இ, ஈ, எ, ஏ, ஐ | வாய் திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப்பல்லைப் பொருந்துதல். |
| உ, ஊ, ஒ, ஓ, ஔ | வாய்திறத்தலுடன் உதடுகளைக் குவித்தல். |

**3. இடையின மெய்களின் முயற்சிப் பிறப்பினை எழுதுக.**

| எழுத்துகள் | முயற்சிப் பிறப்பு |
|---|---|
| ய் | நாக்கின் அடிப்பகுதி மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துதல் |
| ர், ழ் | மேல் வாயை நாக்கின் நுனி வருடுவதால். |
| ல் | மேல் வாய்ப்பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குதல். |
| ள் | மேல் வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதல். |
| வ் | மேல் வாய்ப் பல்லைக் கீழ் உதடு பொருந்துதல். |

**4. க், ங், ச், ஞ், ட், ண் ஆகிய எழுத்துகளின் முயற்சிப் பிறப்பினை எழுதுக.**

| எழுத்துகள் | முயற்சிப் பிறப்பு |
|---|---|
| க், ங் | நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துதல். |
| ச், ஞ் | நாவின் இடைப் பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதி பொருந்துதல். |
| ட், ண் | நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துதல். |

**5. த், ந், ப், ம், ற், ன் ஆகிய எழுத்துகளின் முயற்சிப் பிறப்பினை எழுதுக.**

| எழுத்துகள் | முயற்சிப் பிறப்பு |
|---|---|
| த், ந் | மேல் வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துதல். |
| ப், ம் | மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துதல். |
| ற், ன் | மேல் வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துதல். |

6.

**கூடுதல் பொருத்துக.** (ஏப்ரல் 2023)

1. வல்லின மெய் எழுத்துகள் - அ) கழுத்து
2. மெல்லின மெய் எழுத்துகள் - ஆ) மார்பு
3. இடையின மெய் எழுத்துகள் - இ) தலை
4. ஆய்த எழுத்து - ஈ) மூக்கு

**விடை:** 1-ஆ, 2-ஈ, 3-அ, 4-இ

## மொழியை ஆள்வோம்

**கேட்க :**

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

மாணவர்கள் தாங்களாகவே தமிழ்மொழியை வாழ்த்தி பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களை கேட்டு மகிழ வேண்டும்.

### கீழ்க்காணும் தலைப்புகளில் இரண்டு நிமிடம் பேசுக

**தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

அவையோர்க்கு வணக்கம்!

மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க மொழியைக் கண்டுபிடித்தான். மொழியை நிலைபெறச் செய்ய எழுத்துகளை உருவாக்கினான். மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தினான். காலப்போக்கில் சிறிது சிறிதாகச் சொற்களைச் சொல்லக் கற்றுக்கொண்டான். பிறகு அவை பண்பட்டு பேச்சுமொழி உருவானது.

மனிதன் வருங்காலத் தலைமுறையினருக்குக் கருத்துகளைத் தெரிவிக்க பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். அங்குத் தோன்றியது எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை. பின்பு 'ஓவிய எழுத்து' என்றும் 'ஒலி எழுத்து நிலை' என்றும் பெயர் பெற்றது.

அச்சுக்கலை தோன்றிய பிறகு எழுத்துகள் நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன. பழைய வரிவடிவங்களான வட்டெழுத்து, தமிழெழுத்துகளைக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் காணலாம்.

பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் பழைய தமிழெழுத்துகள் காணப்படுகின்றன. கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்றழைக்கப்பட்டன.

எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி போன்றவை காரணங்களாக அமைகின்றன. பழங்காலத்தில் கற்பாறை, செப்பேடு, ஓலை போன்றவற்றில் எழுதினர்.

ஓலைகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளுக்கு மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவை நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

எழுத்துகளை வேறுபடுத்திக்காட்ட எழுத்துகளின் மேலும் எழுத்துகளுக்கு பக்கத்திலும் புள்ளிகளைப் பயன்படுத்தினர். நெடிலைக் குறிக்க துணைக்கால், ஐகார உயிர்மெய்யைக் குறிக்க இணைக்கொம்பு, ஔகார உயிர்மெய்யைக் குறிக்க கொம்புக்கால் ஆகியவை புள்ளிகளுக்குப் பதிலாக தற்காலப் பயன்பாட்டில் உள்ளன.

ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். இதனால் எழுத்துகளை அறிவதில் சிக்கல் இருந்தது. இவ்விடர்பாட்டைக் குறைக்க எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

வீரமாமுனிவர் தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தார். எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார். உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு, இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து புதிய வரி வடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

இவரைத் தொடர்ந்து ஈ.வெ.ரா. பெரியார் அவர்களால் ணா, றா, னா ஆகிய எழுத்துகளும் ணை, லை, ளை, னை ஆகிய எழுத்துகளும் உருவாயின. அச்சுக் கோப்பதில் இருந்த இடர்களைக் களைந்தார்.

இன்னும் பல மாற்றங்களைப் பெற்று தமிழ்மொழி. நாளுக்கு நாள் வளர்ச்சி பெறும் எனக் கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

நன்றி!

## சொல்லக்கேட்டு எழுதுக

உலக மொழிகளின் எழுத்து வரலாற்றை உற்று நோக்கினால் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம். அவை ஒரு வரிவடிவத்தை விட்டு மற்றொரு வரிவடிவத்தை ஏற்றுக் கொள்ளுதல்; இருக்கின்ற வரிவடிவத்தில் திருத்தம் செய்து கொள்ளுதல்; எழுத்து எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளுதல் ஆகியனவாகும். வரிவடிவ மாற்றம், வரிவடிவத் திருத்தம், எழுத்துகளின் எண்ணிக்கை மாற்றம் ஆகியவற்றை 'எழுத்துச் சீர்திருத்தம்' என்று குறிப்பிடுகிறோம்.

## அகரவரிசைப்படுத்துக

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம். ※

| | | |
|---|---|---|
| 1. அழகுணர்ச்சி | 5. உரைநடை | 9. ஐயம் |
| 2. ஆரம்நீ | 6. ஊழி | 10. ஒலிவடிவம் |
| 3. இரண்டல்ல | 7. எழுத்து | 11. ஓலைச்சுவடிகள் |
| 4. ஈசன் | 8. ஏழ்கடல் | 12. ஔகாரம் |

## கட்டுரை எழுதுக

### எனது தாய்மொழி

**முன்னுரை :**

எனது தாய்மொழி தமிழ். தாய்மொழி என்பது நமது முன்னோர்களால் வழிவழியாக பேசப்பட்டு வரும் மொழியாகும். அவ்வாறு நான் பேசும் மொழி தமிழ்மொழியாகும். அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழி :**

மொழி என்பது ஒருவருடைய உள்ள உணர்வுகளைப் பிறருக்கு உணர்த்துவதற்கும்; பிறருடைய உணர்வுகளை நாம் அறிவதற்கும் பயன்படுகிறது. பிறந்த குழந்தை தன் தாயிடமிருந்து கற்ற மொழி தாய்மொழி. தாய் தன் குழந்தைக்குச் சோறு ஊட்டுவதுடன் மொழியையும் கற்றுக்கொடுக்கிறாள். வீர சிவாஜிக்கு அவருடைய தாய் உணவு ஊட்டும்போது வீரர்களின் கதைகளைக் கூறி அவர் மிகச் சிறந்த வீரனாகத் திகழ்ந்தார்.

**தாய்மொழி வழி அறிதல் :**

தாய்மொழியைப் போன்று எளிமையான மொழி வேறேதும் இல்லை என்பது பல சான்றோர்களின் கூற்று. மனிதன் தான் சிந்திப்பதை எடுத்துக்கூற உறுதுணையாக இருப்பது தாய்மொழிதான். சுயமாக சிந்திக்கவும், அறிவைப் பெருக்குவதற்கும் உதவுவது தாய்மொழிதான்.

**தாய்மொழியின் சிறப்பு :**

மகாத்மா காந்தி தனது வாழ்க்கை வரலாற்றை அவரது தாய்மொழியான குஜராத்தியில் எழுதினார். தாகூர் கீதாஞ்சலியை அவரது தாய்மொழியான வங்கமொழியில் எழுதினார். தாய்மொழியில் படிப்பதால் எழுத்தறிவு, வாசிப்புத்திறன் பெருகும்.

**தாய்மொழியாம் தமிழ்மொழி :**

எனது தாய்மொழியான தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளங்களைப் பெற்றுள்ளது. பேசுவதற்கும், எழுதுவதற்கும் எளிமையான மொழி. பிறமொழி பேசுபவர்களுக்கும் எளிதாக விளங்கிக் கொள்வதற்கும் ஏதுவான மொழி.

**தாய்மொழியின் தொன்மை :**

உலகில் பல்லாயிரக்கணக்கான மொழிகள் தோன்றின. அவற்றுள் சில வழக்கொழிந்துவிட்டன. சில பேச்சுவழக்கில் மட்டும் உள்ளன. ஆனால் நான் பேசும் என் தாய்மொழியாம் 'தமிழ் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தக்குடி' என்ற பெருமைக்குரியது.

**நாடும் மொழியும் நமதிரு கண்கள் :**

'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்ற கூற்றின் படி தாய்நாடும், தாய்மொழியும் சிறப்புற நாம் பாடுபட வேண்டும். தமிழே வேண்டும், எங்குந்தமிழ், எதிலுந்தமிழ் என்ற வேட்கையுடன் தமிழைக் கற்க வேண்டும்.

**முடிவுரை :**

ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழியையும், அதன் சிறப்பு மற்றும் அவசியத்தை ஆராய்ந்து பின்பற்ற வேண்டும்.

## மொழியோடு விளையாடு

### பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.

பூ, மரம், புல், வாழ்த்து, சொல், கிழமை, ஈ, படம், பல், கை, பக்கம், பா.

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் (அரையாண்டுத் தேர்வு 2023) | பூக்கள் | மரங்கள் | புற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பாக்கள் | பக்கங்கள் | பற்கள் |

### ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக

1. படி – கண்ணன் மாடிப்படியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.
2. திங்கள் – சித்திரைத் திங்களில் முழுதிங்கள் தோன்றும் நாள். திங்கட்கிழமை மிகவும் சிறப்பான நாளாகக் கருதப்பட்டது.
3. ஆறு – ஆறுபேர் கொண்ட குழு. ஏரி, ஆறு, குளம் போன்றவை நீர் நிலைகள்.

**கீழ்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

**மா, தேன், மலர், செம்மை, சிட்டு, கனி, குருவி, இலை, காய், கூடு, முட்டை, மரம்**

குருவிக்கூடு

காய்கனி

மாமரம்

தேன் சிட்டு

குருவி முட்டை

மா இலை

சிட்டுக்குருவி

**சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக**

1. **வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.**
   வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்.
2. **உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.** (காலாண்டுத் தேர்வு 2023)
   உலகம் உள்ளவரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.
3. **பொருள்பட இரு சிலேடை ஆகும் இலக்கியம் பாடும்.**
   இரு பொருள்பட பாடும் இலக்கியம் சிலேடை ஆகும்.
4. **கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.**
   உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.
5. **ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.**
   அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்.



## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்...**

1. எழுத்துகளைச் சரியான வரிவடிவத்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச் செய்வேன்.

**படிப்போம்; பயன்படுத்துவோம்!**

| | | | |
|---|---|---|---|
| 1. ஒலிப்பிறப்பியல் | - Articulatory Phonetics | 5. உயிரொலி | - Vowel |
| 2. மெய்யொலி | - Consonant | 6. அகராதியியல் | - Lexicography |
| 3. மூக்கொலி | - Nasal consonant sound | 7. கல்வெட்டு | - Epigraph |
| 4. சித்திர எழுத்து | - Pictograph | 8. சிலேடை | - Pun |

☆ ☆ ☆



www.surabooks.com

## அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .................... .
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. பெரிய கப்பல்கள் .................... மீது செல்லும்.
அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி
3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் .................... .
அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ................ என அழைக்கப்பட்டன.
5. உதடுகளைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ........... .
6. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் ....................

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. க், ங் – நாவின் இடை, அண்ணத்தின் இடை
8. ச், ஞ் – நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி
9. ட், ண் – நாவின் முதல், அண்ணத்தின் அடி
10. த், ந் – நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

**IV. தொகைச்சொல்லை விரித்து எழுதுக.** (1 × 1 = 1)

11. முத்தமிழ் ...................., ...................., ....................

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

12. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
13. இரட்டுறமொழிதல் அணி என்பது யாது?
14. ஓவிய எழுத்து என்றால் என்ன?
15. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

16. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?
17. தற்கால தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.
18. பேச்சுமொழி எவ்வாறு உருவானது?

**VII. அடிமாறாமல் எழுதுக.** (4)

19. 'தமிழ்மொழி வாழ்த்து' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆

www.surabooks.com